


முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (1.3.2025) தனது பிறந்தநாளையொட்டி சென்னை, வேப்பேரி, பெரியார் திடலில் அமைந்துள்ள தந்தை பெரியார் அவர்களின் நினைவிடத்தில் மலர் தூவி மரியாதை செலுத்தினார். உடன் திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி. வீரமணி, நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், திராவிடர் கழக துணைத் தலைவர் கவிஞர் கலி. பூங்குன்றன், பொதுச் செயலாளர் வீ. அன்புராஜ் ஆகியோர் உள்ளனர்.



தமிழ்நாடு முழுவதும் 2025–2026 ஆம் கல்வியாண்டிற்கான மாணவர் சேர்க்கை தொடங்கப்படுவதையொட்டி நேற்று (1.3.2025) சென்னை, திருவல்லிக்கேணி, லேடி வில்லிங்டன் அரசு மாதிரி பெண்கள் மேல்நிலைப் பள்ளியில், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் மாணவர்களுக்கான சேர்க்கை ஆணையை வழங்கினார். இந்நிகழ்வின்போது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், பள்ளிக் கல்வித் துறை அரசு முதன்மைச் செயலாளர் மருத்துவர் பி.சந்தர மோகன், மாநகராட்சி பணிகள் குழு தலைவர் நே.சிற்றரசு, பள்ளிக் கல்வித் துறை இயக்குநர்கள் முனைவர் கண்ணப்பன், முனைவர் பழனிச்சாமி, முனைவர் பூ.ஆ, நரேஷ், அரசு உயர் அலுவலர்கள், தலைமை ஆசிரியர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டார்கள்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (1.3.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், ஈரோடு மாவட்டம், தொண்டங்கோப்பு மற்றும் கரும்பாறை மலைவாழ் கிராமத்தைச் சேர்ந்த சிறுவர், சிறுமியர் முதலமைச்சர் அவர்களுக்கு பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவித்தனர்.



தமிழ்நாடு முழுவதும் 2025–2026 ஆம் கல்வியாண்டிற்கான மாணவர் சேர்க்கை தொடங்கப்படுவதையொட்டி நேற்று (1.3.2025) சென்னை, திருவல்லிக்கேணி, லேடி வில்லிங்டன் அரசு மாதிரி பெண்கள் மேல்நிலைப் பள்ளியில், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் மாணவர்களுக்கான சேர்க்கை ஆணையை வழங்கினார். இந்நிகழ்வின்போது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், பள்ளிக் கல்வித் துறை அரசு முதன்மைச் செயலாளர் மருத்துவர் பி.சந்தர மோகன், மாநகராட்சி பணிகள் குழு தலைவர் நே.சிற்றரசு, பள்ளிக் கல்வித் துறை இயக்குநர்கள் முனைவர் கண்ணப்பன், முனைவர் பழனிச்சாமி, முனைவர் பூ.ஆ, நரேஷ், அரசு உயர் அலுவலர்கள், தலைமை ஆசிரியர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டார்கள்.



சென்னை – அண்ணா அறிவாலயம் – ‘கலைஞர் அரங்கில்’ தொண்டர்களின் வாழ்த்துக்களை ஏற்றுக் கொண்ட கழகத் தலைவர் அவர்களுக்கு, திருவண்ணாமலை நகர்மன்ற முன்னாள் தலைவர் இரா.ஸ்ரீதரன் 250 கிலோ எடை கொண்ட பித்தளையில் செய்யப்பட்ட சிங்க உருவச் சிலையை வழங்கினார்.

### கன்னியாகுமரி மாவட்டம் – இனயம் புத்தன்துறை மீனவ கிராமத்தில்

# மின்சாரம் தாக்கி உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் -நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, மார்ச் 2- கன்னியாகுமரி மாவட்டம், இனயம் புத்தன்துறை மீனவ கிராமத்தில் மின்சாரம் தாக்கி உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவியை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

கன்னியாகுமரி மாவட்டம், கிள்ளியூர் வட்டம், இனயம் புத்தன்துறை மீனவ கிராமத்தில் புனித அந்தோணியார் தேவாலய வருடாந்திர திருவிழா நடந்துவரும் நிலையில் நேற்று (1.3.2025) மாலையில் நடைபெற்ற தேர் பவனியில் அலங்காரம் உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ள வைக்கப்பட்டிருந்த இரும்பு ஏணியை சாலையின் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு மாற்ற முயன்றபோது எதிர்பாராதவிதமாக மின்சாரம் தாக்கி, இனயம் புத்தத் துறையைச் சேர்ந்த திருவாளர்கள் விஜயன் (வயது 52) த/பெ. தனிஸ்லாஸ், சோபன் (வயது 45) த/பெ. பொ்னின், மனு (வயது 42) த/பெ. ஒஸ்மான் மற்றும் ஜெஸ்டிஸ் த/பெ. விக்டர் (வயது 35) ஆகிய நான்கு நபர்கள் உயிரிழந்தனர் என்ற செய்தியறிந்து மிகவும் வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த நான்கு நபர்களின் குடும்பத்தினருக்கு இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதுடன் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஐந்து இலட்சம் ரூபாய் வழங்கிட உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.






திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், கும்மிடிப்பூண்டி தொகுதி, கும்மிடிப்பூண்டி பேரூர் கழக தி.மு.க. சார்பில் தமிழக முதலமைச்சர் பிறந்தநாளை முன்னிட்டு கழக .கொடி ஏற்றி பேரறிஞர் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து கழக தலைவர் பிறந்தநாள் உறுதிமொழியேற்று 500 நபர்களுக்கு மதிய உணவை கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் டி.ஜெ.கோவிந்தராஜன் வழங்கி சிறப்புரையாற்றினார். நிகழ்ச்சியில் மு.மணிபாலன், இரா.அறிவழகன், எஸ்.ரமேஷ், எம்.கேசவன், எஸ்.ராமஜெயம், இரா. ரமேஷ், இஸ்மாயில், டி.கே.ராஜா, காளிதாஸ், மாணவர் அணி டி.ஜெ.ஜி.தமிழரசன், எஸ்.உதயகுமார், கே.என்.பாஸ்கர், உமாபதி, குப்பன், கா.பரத்குமார், கருணாகரன், எஸ்.எம்.திருநாவுக்கரசு, பா.பரத்குமார், இளவரசன், பா.சுரேஷ், மெய்யழகன், எம்.அருள், எம்.ஜெயசந்திரன், சாண்டில்யன், பஜார் விஜி, முகிலன், பா.அறிவழகன், பார்த்திபன், அஜீத், மஸ்தான், அருண்மொழி, போண்டாசிவா, கல்விசெல்வம், பழக்கடைசெல்வம், செந்தில், ரவி, விக்கி, சரத்குமார், பீரவின், ராஜீவ், நந்தா, இளம்புயல்பீரவின் உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.

### ஸ்டெர்லிங் மோகன் – இ.காமேஷ்ராஜ் தாயார்

# இ.கிளியம்மாள் திருவுருவப் படத்திறப்பு!

## நே.சிற்றரசு – தயாநிதி மாறன் எம்.பி. – எழிலன் நாகநாதன் - வினோத் வேலாயுதம் பங்கேற்பு!



சென்னை, மார்ச் 2- ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி துணைச் செயலாளர் ஸ்டெர்லிங் மோகன் மற்றும் 110வது வட்ட துணைச் செயலாளர் இ. காமேஷ்ராஜ் ஆகியோரின் தாயார் மறைந்த திருமதி இ.கிளியம்மாள் அவர்களின் திருஉருவப்படத்தை இன்று (02.03.2025) மாலை 7 மணி அளவில் எண். 7/42, ஜெயலட்சுமிபுரம் 1வது தெரு, சென்னை நுங்கம்பாக்கம் - 600 034 எனும் முகவரியில் உள்ள அவரது இல்லத்தில் சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே. சிற்றரசு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் எம்.பி., ஆயிரம் விளக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் எழிலன் நாகநாதன் மற்றும் ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி செயலாளர் வினோத் வேலாயுதம் மற்றும் 110வது வட்டக் கழகச் செயலாளர் கே.எஸ். தினேஷ்பிரபு ஆகியோர் திறந்து வைக்க உள்ளனர்.

இதில் மாவட்ட கழக நிர்வாகிகளும் பகுதி கழக நிர்வாகிகளும் வட்டக் கழக தோழர்களும் மற்றும் பலர் கலந்து கொள்கிறார்கள்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## பலகுரலரசு ‘மிசா’ முருகுபாண்டியன்

## மார்ச் 1 (2016)



தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரின் பேச்சுக்களால் ஈர்க்கப்பட்டு ஆசிரியர் பணியில் இருந்து விலகி கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.

1957இல் ‘உதயசூரியன் நாடக மன்ற’த்தை தஞ்சையில் தொடங்கி 1000க்கும் மேற்பட்ட நாடகங்களையும், 40,000க்கும் மேற்பட்ட கலை நிகழ்ச்சிகளையும் நடத்தியவர்.

கழக மாநாடுகளில் நடைபெற்ற கலைநிகழ்ச்சியின் போது பலகுரலில் பேசியதை கண்ட பேரறிஞர் அண்ணா அவர்கள் இவருக்கு “பலகுரலரசு” எனும் பட்டம் அளித்து பாராட்டினார்..

நெருக்கடி காலத்தில் மிசா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறையில் இருந்தவர்.

“கழகத்திற்கு சோதனை வந்த காலங்களில் என்னைவிட்டு எங்கும் செல்லாமல், எல்லா சோதனைகளின் போதும், வேதனைகளின் போதும் என்னுடனே இருந்து ஓங்கி ஒலித்த குரல், இந்த பலகுரல் தம்பி முருகுபாண்டியன்” என்று தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**